# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 18 வியாழக்கிழமை (04-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 294

# ஒட்டுசுட்டான் பகுதியில் கடும் சமர்

# தொடர்வதாக அரசதரப்பு அறிவிப்பு

## உயிர்ச்சேதம் அதிகம் என படை வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, நவம்பர் 4

ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள படைத் தளங்கள் மீது கடந்த திங்கள் இரவு விடுதலைப் புலிகள் ஆரம்பித்த பெரும் தாக்குதல்களை அடுத்து அங்கு வெடித்த கடும் சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்றும் அப்பகுதியில் உக்கிரச் சண்டைகள் நடைபெற்றன என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்த மோதல்களில் 59 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 182 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 63 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அது தெரிவித்தது.

அங்குமிங்குமாகச் சிதறிக் காணப்படும் இராணுவப் பிரிவுகளை ஒன்றிணைப்பதிலும் நிலையைப் பலப்படுத்துவதிலும் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

சண்டை நடைபெற்றுவரும் பகுதிகளுக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் உயிர்ச்சேதம் அதிகம் என்று வவுனியாப் படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

படையினரில் உயிரிழந்

[10 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போது இடம்பெறுவது ஓயாத அலைகள் - 3

வவுனியா, நவ. 4

ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்திருந்த படைத் தளங்கள் மீது கடந்த திங்கள் நள்ளிரவு விடுதலைப் புலிகள் ஆரம்பித்த பெரும் தாக்குதல்களுக்கு ''ஓயாத அலைகள் - 3'' என விடுதலைப் புலிகள் பெயரிட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல்களுக்கு ''ஓயாத அலைகள் - 1'' என்றும்—

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற கிளிநொச்சி இராணுவ முகாம் மீதான தாக்குதல்களுக்கு ''ஓயாத அலைகள் - 2'' என்றும் — புலிகள் பெயரிட்டு இருந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் பலி!

தென்மராட்சி, நவ. 4

சாவகச்சேரி, சங்கத்தானை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து நேற்று சாவகச்சேரிப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் இனந் தெரியாத ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் இனம் காணும் பொருட்டும் மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-173-117-139-15)

## நகரில் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். நகரில் நவீன சந்தையின் ஒரு பகுதியையும் பெரிய கடைப் பகுதியையும் சுற்றி வளைத்த படையினர் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 4.45 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

(இ-173-15)

## நெடுங்கேணி, அம்பகாமம் பகுதிகள்: கைப்பற்றியதாகப் புலிகள் தெரிவிப்பு

வவுனியா, நவ. 4

கடந்த திங்கள் நள்ளிரவு ஆரம்பிக்கப்பட்ட ''ஓயாத அலைகள்-3'' இராணுவ நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் பகுதியுடன் நெடுங்கேணி, அம்பகாமம் ஆகிய பகுதிகளும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் படை வட்டாரங்கள் இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை. சண்டை தொடர்ந்து நடப்பதாகவே தெரிவித்தன.

ஒட்டுசுட்டான் முகாமுக்குள் ஊடுருவி ஆரம்பித்த தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்ததாகவும் —

தொடர்ந்து இடம்பெற்ற தாக்குதல்களால் நேற்று முன்தினம் அதிகாலை நெடுங்கேணிப் பிரதேசமும் பிற்பகலில் அம்பகாமம் பகுதியும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாகவும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி பிரதேசங்களில் இருந்த 6 பிரதான முகாம்கள், 16 க்கும் மேற்பட்ட மினி முகாம்கள்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## சண்டை நடக்கும் பகுதிகளுக்கு இராணுவத் தளபதி விஜயம்

இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரிய நேற்றுச் சண்டை நடைபெறும் பகுதிகளுக்கு விஜயம் செய்தார் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

நிலைமைகளை நேரடியாக கண்காணித்து தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பாண்டியன்குளம் பகுதியில் கிபிர், ஆட்லறித் தாக்குதல்கள்!

### அறுவர் பலி; 13 பேர் காயம்

வவுனியா. நவ 4

இராணுவக் கட்டுப்பாடற்ற பாண்டியன்குளம் பகுதி மீது நேற்றுக் காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கிபிர் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் காரணமாக 6 பொதுமக்கள் பலியாகினர் என்றும் மாணவர் மூவர் உட்பட 13 பேர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5.45 மணியளவில் கிபிர் விமானத் தாக்குதல் இடம்பெற்றது.

கிபிர் தாக்குதலில் உயிரிழந்தோர் விவரம் வருமாறு:-

★ த. கிருஷ்ணராஜா (வயது-65)
★ இ. நல்லநாதன் (வயது-23)

[10 ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவுக்கு மோசமான பாதிப்பு!

தற்பொழுது ஒட்டுசுட்டான் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நடத்திவரும் தாக்குதல்கள் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் சந்திரிகா குமாரதுங்கவுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்கள் சந்திரிகாவுக்கு மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை விடுதலைப்புலிகள் அறிந்திருப்பார்கள் என்று கொழும்பு பி.பி.ஸி. செய்தியாளர் சுசிபிரைஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலைப் புலிகள் நன்கு திட்டமிட்டு நடத்தி வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (இ)

## கனகராயன் குளம் நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்

வவுனியா, நவ. 4

கனகராயன் குளம் இராணுவ முகாம் மீது நேற்று நண்பகல் முதல் விடுதலைப்புலிகள் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களினால் 6 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 284 படையினர் காயமடைந்தனர் என்றும் வவுனியாவில் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நண்பகல் முதல் சுமார் 5 மணி நேரம் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும்—

முகாம் பகுதியில் பரவலாக வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஆயுதக் கிடங்கு, இராணுவ வைத்தியசாலை, பிரிகேடியரின் இல்லம் ஆகியன உட்பட 8 கட்டடங்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின என்றும்— அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-6-7-21-4-8)

## அ' புரம் செல்ல முடியாதோரின் வழக்கு இங்கேயே விசாரணை

### பிரதம நீதியரசர் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 4

அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு வழக்குத் தவணைக்குச் செல்ல முடியாத யாழ். குடாநாட்டிலுள்ள சந்தேக நபர்களின் வழக்குகளை யாழ். மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு சட்டமா அதிபருக்கு பிரதம நீதியரசர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் பிரதம நீதியரசரால் பருத்தித்துறை - மல்லாகம் நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வதியும் நபர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகள் சம்பந்தமாக மாற்று நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை - மல்லாகம் நீதிவான் விக்னராஜா கடந்த மாதம் 8 ஆம் திகதி பிரதம நீதியரசருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அதற்கிணங்கவே பிரதம நீதியரசர் சட்டமா அதிபருக்குக் குறித்த பணிப்புரையை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இது போன்ற வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூன்று சந்தேகநபர்களை நெல்லியடிப் பொலீஸார் ஆஜர் செய்திருந்தனர்.

அப்போது பிரதம நீதியரசரினால் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பணிப்புரையை நீதிவான் எடுத்துக் கூறினார்.

இதன் பிரகாரம் சட்டமா அதிபரின் செயல்பாடுகளை எதிர்பார்த்து அடுத்த வருடம் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னப்பு பிளசம்

திருமதி சின்னப்பு பிளசம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீஸ் சின்னப்பு அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன், காலஞ்சென்ற ராசாத்தி, காலஞ்சென்ற அரசரெட்ணம், றஞ்சன், பபா, சந்திரா, இந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இளையதம்பி பாக்கியம், சின்னத்துரை, அன்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்ரன் மணி, மரியதாஸ், லீலாமலர், றுஸ்ரி, டலாஸ், ஜீவா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (4-11-99) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 (பு. நே.) மணிக்கு 140, பழைய பூங்கா வீதியிலுள்ள இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

140, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். [70681]

## டாக்டர் பொன்னையா சின்னத்துரை
(ஜோசேப்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் பொன்னையா சின்னத்துரை அவர்கள் நேற்று (93-11-99) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா அவர்களின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் செல்வன் பிரதீபன் அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தங்கம்மா, மாணிக்கம், திருமதி கிருஷ்ணபிள்ளை பவளம், கதிரவேல் காலஞ்சென்றவர்களான நாகமணி, டாக்டர் பொன். மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவக்கொழுந்துவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று4-11-99 வியாழன் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. சிவக்கொழுந்து
மைத்துனர்

அல்வாய் வடக்கு,
அல்வாய். (சி/9698)

## செல்லையா விஜயரட்ணம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்கள ஒப்பந்தகாரர் செல்லையா விஜயரட்ணம் 19, கதிரேசன் வீதி, வயிரவபுளியங்குளம், வவுனியாவில் 31-10-99 அன்று காலமானார்.

அன்னார் செல்லையா தம்பதிகளின் மகனும் மருதனார்மடம் ஜெயசக்தி பார்மஸி உரிமையாளர் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் மஞ்சு, மிதுலா, மயூரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி தம்பையா அன்னப்பிள்ளையின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1-11-99 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்

தகவல்:
ஆ. சிற்சபேசன்

உடுவில். (70685)

## திருமதி கதிர்காமு மகேஸ்வரி

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமு மகேஸ்வரி அவர்கள் 03 - 11 - 99 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ் சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற மார்க்கண்டு, கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினபூபதி (கொழும்பு), காலஞ் சென்ற துவாரகாம்பாள், புஸ்பராணி, உமாமகேஸ்வரன் (அமுது), சத்தியசீலன் (குட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமாஸ்கந்தன் (கொழும்பு), மகேஸ்வரன்(அத்தான்), யோகரட்ணம், செல்வராணி (திருநெல்வேலி), தேவராணி (கரம்பொன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லிங்கன், யசோதா, கௌசி, மதிவாணன் (கொழும்பு), வசிகரன் (கொழும்பு), கிரிதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தனுசியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிரோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), துஷ்யந்தி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மிதுலா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), யுரேன் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), குஜாலினி (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), கஜலக்சனா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிருந்தா, சுகந்தா, அஜந்தா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோவிற்குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் இன்று 04 - 11 - 99 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
உமாமகேஸ்வரன் (அமுது)
(மகன்)

கைலாயபிள்ளை வீதி,
கோவிற்குடியிருப்பு,
சாவகச்சேரி. (70683)

## ஒன்றியம் கவலை தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினரும் தினமுரசு வாரப் பத்திரிகை ஆசிரியருமான நடராஜா அற்புதராஜா நேற்று முன்தினம் கொழும்பில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கவலையும் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

நடராஜா அற்புதராஜாவின் குடும்பத்தினருக்கும் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

## மாலைநேர பஸ்சேவை விஸ்தரிப்பு

பருத்தித்துறை – யாழ்ப்பாணம் கடைசிநேர பஸ் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு மாலை 6.30 மணிக்கும் இம் மாதம் முதல் (நேற்று முன்தினம்) கடைசிநேர பஸ் வண்டிகள் புறப்பட்டுவருகின்றன.

முன்னர் பருத்தித்துறையிலிருந்து பிற்பகல் 4.30 மணிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 5.45 மணிக்கும் கடைசிநேர பஸ் வண்டிகள் புறப்பட்டு வந்தன. (ஐ-173)

## திருத்தம்

03 - 11 -99 உதயன் 4 ஆம் பக்கத்தில் வெளியான யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை கேள்விக் கூறு விளம்பரத்தில் கதிரைகளின் மாதிரிகளையும் விவரங்களையும் சபையில் காரியாலய நேரத்தில் பெற்று மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ. 10,000 என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. ரூ. 1,000 என்பதே சரியானதாகும். தவறுக்கு வருந்துகின்றோம்.

ஆ-ர்


நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன், குஷ்பு
ரோஜாவைக் கிள்ளாதே
07-11-99 முதல்
காதலுக்கு மரியாதை
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70693)

ராஜா
யாழ்ப்பாணம்
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த
உழைப்பாளி
10 30, 2-30
(சி/9677)

லிபேட்டி அச்சுவேலி.
விஜய் - சுவாதி
நடித்த
தேவா
காட்சிகள்: 10-30, 2-30
T.P. No. 070-212223
070-212678
(70541)


# நன்றி நவிலல்

26 - 10 - 99 அன்று எனது மனைவி

## திருமதி பத்மலோஜினி

காலமான தகவல் அறிந்து உடனடியாக என்னை நேரில் சந்தித்தும் 27 - 10 - 99 இல் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நா. சிவசண்முகநாதன்

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
(70696)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அம்பிகைப்பிள்ளை சோமசுந்தரம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகைப்பிள்ளை சோமசுந்தரம் நேற்று முன்தினம் 2—11—99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் கங்காதரன் (ஓய்வுபெற்ற நில அளவைப் படவரைஞர்), காலஞ்சென்ற சிவபாலன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி பராசக்தி, திருமதி சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திருமதி கங்கேஸ்வரி ரவிச்சந்திரா, திருமதி சிவசக்தி உமாசுதன், காங்கேயன், சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் கௌஷிகனின் அன்புப் பூட்டியுமாவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (4 — 11 — 99) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. காங்கேயன்
(பேரன்)

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (70689)

## செல்வி ஆறுமுகம் சியாமளா

(யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய A/L 2000 கலைப் பிரிவு மாணவி)

காரைநகர் கொம்பாவோடை களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சியாமளா ஆறுமுகம் 02-11-99 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஆறுமுகம் (சியாமளா களஞ்சியம், நெடுங்கேணி) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் சந்திரமதி (வவுனியா), சிவகுமாரன் (பசறை), சிவனேஸவரி, சிவமலர் (பிரான்ஸ்), ஞானகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செந்தில்நாதன் (சிற்றி மோட்டோர்ஸ், வவுனியா), சந்திரமதி (பசறை), தனபாலகுமாரன் (பாலன் மில், காரைநகர்), அரிகரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரன், கபிலன், கீரன், அபிநயனி ஆகியோரின் சிறிய தாயும் அஜந்தா, கேதரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04 11-99) காலை 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஆறுமுகம்
(தந்தை)

கொம்பாவோடை,
களபூமி,
காரைநகர். [70694]

## திருமதி கண்மணி சிவசுப்பிரமணியம்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி கண்மணி சிவசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர், உள்நாட்டு இறைவரித்திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும் ஸ்ரீதரன், ஸ்ரீறங்கன், ஸ்ரீபத்மினி, ஸ்ரீஸ்கந்தன், ஸ்ரீகலா, ஸ்ரீபிரகாசன், ஸ்ரீதரி, ஸ்ரீவதனி, ஸ்ரீலதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாதினி, கதரீன், சுகுமாரன், வசந்தி, வைகுந்தநாதன், வசந்தி, கையிலநாதன், ஸ்ரீதரன், சிவகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிமலை, யகஷன், அஞ்சலி, சஞ்சயன், வைதேகி, யதார்த்தன், அம்பிகை, அனந்திகை, றம்யா, சகானா, திபேத், சயந், கவின், பீஷ்மன், பகலவன் ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-10-1999 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சு. ஸ்ரீபத்மினி
(மகள்)

566/5, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (70686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண உச்சி மாநாடு

## பெப்ரவரியில் நடத்துவதற்கு இணக்கம்

ஒஸ்லோ, நவ. 4

இஸ்ரேல் — பலஸ்தீன பிரச்சினைக்குநிரந்தரத்தீர்வு காண்பதற்காக பெப்ரவரி மாதத்தில் உச்சிமாநாடு ஒன்று ஏற்பாடாகியுள்ளது. நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், இஸ்ரேல் பிரதமர் எகூட் பராக், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஆகியோர் இந்த மாநாட்டைக் கூட்ட இணங்கியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி இரு நாட்டுத் தலைவர்களுடனும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது என்றும் —

இறுதிக்கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் பெப்ரவரியில் இடம் பெறும் என்றும் —

அந்த நேரம் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றும் — பில் கிளின்ரன் தெரிவித்தார்.

(க-3)

### பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி

## கால அட்டவணை வழங்க முஷாரப் மறுப்புத் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், நவ 4

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி எப்போது ஏற்படும் என்பது குறித்து கால அட்டவணை எதுவும் தரமுடியாது என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி முஷாரப் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் குழு ஒன்று பாகிஸ்தானுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்த சமயம் ஜனநாயக ஆட்சி தொடர்பாக கால அட்டவணை வழங்க வேண்டும் என்று கோரியது.

அதற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தாம் ஆராய்வதாகவும் —

அதன் பின்பே ஜனநாயக ஆட்சி குறித்து ஆராய முடியும் என்றும் — முஷாரப் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

### துபாய் உயர் நீதிமன்றம்

## இலங்கைப் பெண் ஒருவருக்கு மரணதண்டனை விதிப்பு

### அதை நிறுத்த மன்னிப்புச்சபை முயற்சி

லண்டன், நவ. 4

இலங்கைப்பெண்ஒருவருக்கு துபாய் உயர் நீதிமன்றம் விதித்துள்ள மரணதண்டனைத் தீர்ப்பை ரத்துச்செய்யும் முயற்சியில் சர்வதேச மன்னிப்புச்சபை ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பணிபுரிந்த ஜனனி பெரேரா என்ற இலங்கைப் பெண் கொலைக் குற்றச்சாட்டு ஒன்றின்பேரில் துபாய் உயர் நீதிமன்றத்தில்நிறுத்தப்பட்டார்.

அந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்திருந்தது.

இந்தப் பெண்ணின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருணை மனுவின் பேரில் அந்தக் குற்றச்சாட்டை ரத்துச் செய்யும் நடவடிக்கைகளை சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்டுள்ளது.

மனிதாபிமான ரீதியில் இந்த மன்னிப்பை வழங்க வேண்டும் என்று அந்த அமைப்பு கேட்டுள்ளது.

## பிரெஞ்சு அமைச்சர் ராஜினாமா!

பாரிஸ், நவ. 4

ஊழல் மோசடிக்குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரான்ஸ் நிதி அமைச்சர் டொமினிக் ஸ்ரொக்கான் அதற்கான தார்மீகப் பொறுப்பேற்றுப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பிரான்ஸில் பதவியேற்றபோது, நிதி அமைச்சர் பதவியை ஏற்ற அவர் அந்த நாட்டில் புரட்சிகரமான திட்டங்களை அமுல் செய்து பொருளாதாரத்தை வளர்க்க பாடுபட்டார்.

நிதி அமைச்சராக அவர் பதவியேற்க முன்னர் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டார் என கிளப்பப்பட்ட குற்றச்சாட்டை அவர் ஏற்று தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அவரின் திடீர் ராஜினாமாவால் பிரெஞ்சு அரசாங்கம் பெரும் நெருக்கடியில் சிக்கி உள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

(இ-3)

## கப்பலில் திடீர்த் தீ விபத்து 100 அகதிகள் உடல் கருகி மரணம்

மத்திய கிழக்கு, தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த 400 அகதிகளுடன் இத்தாலி நோக்கி சென்று கொண்டிருந்த கப்பலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் நூறு பேர் உடல் கருகிப் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்காக இத்தாலி ஊடாகச் செல்வதற்காக இவர்கள் சட்ட விரோதமாக கப்பலில் பயணம் செய்தனர் என்றும்—

வாகனங்கள் ஏற்றப்பட்ட அந்தக் கப்பலில் இவர்கள் ஒளித்துச் சென்றனர் என்றும் —

கப்பலில் ஏற்பட்ட திடீர் தீ காரணமாக பயணம் செய்தவர்கள் நூறு பேர் உடல் கருகிப் பலியானார்கள் என்றும் — கூறப்பட்டது.

உயிரிழந்தவர்களின் ஆவணங்களும் எரிந்ததால், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து அறிய முடியவில்லை.

இதில் உயிர் தப்பியவர்கள் மூலம் இறந்தவர்களின் விவரங்களைப்பெறமுயற்சி எடுக்கப்பட்டுள்ளது

## சார்க் மாநாட்டைப் பின்போடும் முயற்சிக்கு பாக். எதிர்ப்பு

இஸ்லாமாபாத், நவ. 4

எதிர்வரும் 26 ஆம் திகதி நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் ஆரம்பமாக உள்ள சார்க் மாநாடு பின்போடப்படக்கூடாது என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

மாநாட்டைப் பின்போடுவது சார்க் அமைப்பின் அரசியல் சாசனத்தை மீறும் செயலாக அமையும் என பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சார்க் மாநாட்டை பின் போடுவது தொடர்பாக ஆராயப்படுவதாக வெளியான செய்திகளை அடுத்து பாகிஸ்தான் இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களை காரணங்காட்டி மாநாட்டைப் பின் போடுவது பிராந்திய ஒருமைப்பாட்டில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தவிர்க்க வழிவகுக்கும் என்றும் —

உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக மாநாட்டினை பின்போடுவது தொடர்பாக சார்க் அமைப்பின் அரசியல் சாசனத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் —

ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் கைக்கொள்ளப்பட வேண்டிய தலையிடாக் கொள்கையில் இருந்து சார்க் அமைப்பு நாடுகள் விலகுவது தெற்காசியப் பிராந்தியத்தின் அமைதியையும் முன்னேற்றத்தையும் பாதிக்கும் என்றும் — பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[இ-9-6]

### உலக அரங்கில்

## ஏவுகணை பரிசோதனை

ஈரான் புதிய விமான எதிர்ப்பு ஏவுகணையை பரிசோதிக்கவுள்ளது.

தற்பாதுகாப்புக் காரணமாகவே இந்த ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

சீனா, வடகொரியா மற்றும் பிரிட்டனின் தொழில்நுட்ப உதவியுடன் இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் இந்த முயற்சியை அமெரிக்கா வலுவாகக் கண்டித்துள்ளது.

(க-3)

## விரிவுரையாளர் நியமனம்; நேர்முகப் பரீட்சை இங்கு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகி விட்டதாக உயர் தொழில்நுட்ப நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆங்கிலம், வர்த்தகம், முகாமைத்துவம், கணனி; கணிதப் புள்ளி விவரவியல் போன்ற பாடங்கள் உட்பட பல பாடங்களுக்கு உதவி விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் (ஐ-5)

## தொண்டாவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், நவ. 4

அமைச்சர் தொண்டமான் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களில் மட்டுமன்றி ஏனையவர்களின் நலன்களிலும் அக்கறை காட்டிய பெரும் தொழிற் சங்கவாதியும் அரசியல் வாதியுமாவார்.

கல்முனை — அம்பாறை மாவட்டத் தபால் அதிபர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் இ. திருநாவுக்கரசு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்களத் தேர்ச்சி பெறவில்லை என்பதால் பதவி உயர்வு மறுக்கப்பட்ட தமிழ்த் தபால் அதிபர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க அமரர் தொண்டமான் முன்னின்று உழைத்தார் என்றும் —

அது போலவே ஏனைய பல தரப்பினர்கள் உரிமைகளையும் நலன்களையும் பேணுவதற்கு உழைத்தவர் என்றும்— அந்தச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(அ)

## கூட்டம்

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற் [illegible] [illegible] கல்லூரியில் நடைபெறும்.

[ஐ-152]


## தீபாவளி திருநாளையொட்டி அதி விசேஷ கழிவு விற்பனை

- பட்டு, பருத்திப்புடைவைகளும்
- ஆண், பெண் இருபாலாருக்குமான றெடிமேட் ஆடைகளும்
- கண்கவர் சாறிகளும்

மொத்த விலையில்

வாடிக்கையாளருக்கு.........

★ அனைத்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை


சீமாட்டி

(புடைவைக் கடல்)

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9588)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 — 02 — 1933 | 07 — 08 — 1999 |

### கந்தையா செல்வராசா

(முன்னாள் உரிமையாளர், செல்வராசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

இன்று (4-11-99) வியாழக்கிழமை காலை நடைபெற விருக்கும் கந்தையா செல்வராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கல்லடி ஒழுங்கை,
தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(70660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் பயன்தரு மரங்கள் உள்ள மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 19, தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(70628)

## வீடு தேவையா?

வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும் ஒரு குடும்பத்துக்கு இலவசமாக கோப்பாயில் வீடு குடியிருக்க கொடுக்கப் படும். விரும்பியோர் கீழ்க் காணும் முகவரியில்தொடர்பு கொள்ளவும். டாக்டர் ஜெயரட்ணசிங்கம் மெடிக்கல் கிளினிங், கிறிஸ்தவகல்லூரி அருகில் கோப்பாய்.

(70689)

## விற்பனைக்கு

தேநீர்க் கடைகளுக்கும், பேக்கரிகளுக்கும் பாவிக்கக் கூடிய சோக்கேஸ்கள் மற்றும் புத்தம் புதிய Lumala Sports 21 Gear Bike விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேன் (பிறிமியர்), பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(70646)

New Computer Stabiguard (CS series), Video bulb (Osram Germany (1000W). Sony P6-120 MP3 (8 mp) Cassette விற்பனைக்கு 154, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(70653)

ஆண், பெண் (கறுப்பு, வெள்ளை] பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஆனந்தன் பரமபதி, உரும்பிராய் தெற்கு. தொலைபேசி இல. 2168.

(70641)

## தவறிவிட்டது

ஆன் நிலாந்தி அருளானந்தம் ஆகிய எனது தேசிய, விசேட, பாடசாலை அடையாள அட்டைகள் [817152392V –0906009534] பேர்ஸுடன் உடுவில் ஆர்க் லேன் அருகில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடுவில் மகளிர் கல்லூரியில் ஒப்படைத்து உதவவும்.

[70635]

---

# 2000 A/L DAY CLASS

**கலை, வர்த்தகம்**

ஆரம்பம்
5-11-99 வெள்ளி

இந்துநாகரிகம்
கோப்பாய் சிவம்
2.30 p.m. Day Class
3.30 p.m. 2001 A/L

பொருளியல்
திரு. விக்கி
3.30 p.m. Day Class

வழமையான ஆசிரியர் குழு

**கிறிஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி.

(70760)

---

## யாழ். போதனா வைத்தியசாலை
## புனித வேளாங்கண்ணி சிற்றாலயம்

★ ஞாயிறு வெள்ளி தினங்களிலும், கடன்திருநாள்களிலும், போயா தினத்திலும் நண்பகல் 12 மணக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்

★ மாதத்தின் ஒவ்வொரு முதல் வெள்ளிக்கிழமையிலும் மாலை 4 45 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றமும் குணமாக்கல் வழிபாடும் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

நாளை 05 - 11 – 99 அன்றும் மாலை வழிபாடு இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– ஆன்மகுரு

(70647)

---

# BEACON

(வெலிங்டன் சந்தி அருகில்)

## DAY CLASS A/L 99

கணக்கீடு - திரு. பாலவாசன
பொருளியல் - திரு. சண
வணிகக்கல்வி - திரு. சிவராஜா
அளவையியல் - திரு. எஸ்.எஸ். மனோகரன்
புள்ளிவிவரவியல்- தற்போதைய பிரபல ஆசிரியர்

**ஆரம்பம்: 09 - 11 - 1999**

(70630)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் நட்புக்கும் உரிய
சுதர்சன், மகிதரன்
ஆகியோரின் பாசமிகு தந்தையார்

## சின்னத்துரை ஆனந்தவடிவேல்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயருறுவதோடு அமரரின் குடும்பத்தாரின் துயர்துடைக்க இறைவனைப் பிரார்த்தித்து ஆத்மா சாந்தியடைய வணங்குகிறோம்.

சுந்தரலிங்கம் குடும்பம்,
கண்ணன் லொட்ஜ் ஊழியர்கள்.

இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

(சி/9690)

---

# SALE SALE

இதோ!
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்

## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

**07 - 11 - 99** வரையுமே!

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவை ரகங்களுக்குக் கழிவு உண்டு.

## மகாநதி
புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T. P. 2552

4, நவீன சந்தை, சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறைகள்

16, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி.

---

யாழ். பல்கலைக்கழக
உளநலத்துறையும் மருத்துவ மாணவர் ஒன்றியமும்
வழங்கும்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின்

# வேள்வித் தீ

[நாடகம்]

| | |
|---|---|
| இரண்டு காட்சிகள் | கைலாசபதி கலையரங்கு |
| மு. ப. 10-00 மணி | 6 – 11 – 99 |
| பி. ப. 3-30 மணி | சனிக்கிழமை |

குறிப்பு:- 31 – 10 – 99 அன்று நடைபெறவிருந்த நிகழ்ச்சிக்கான நுழைவுச் சீட்டுக்கள் அந்தந்த நேரப்படி பயன்படுத்த முடியும்.

[70672]

---

## பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம்
(யாழ். மாவட்டம்)

# விசேட பொதுக்கூட்டம்

பயிற்றப்படாத ஆசிரியர்களின் எதிர்கால நிலை குறித்து ஆராயும் பொருட்டு அனைத்துப் பயிற்றப் படாத ஆசிரியர்களுக்குமான விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

நாள்: 06 – 11 – 1999 சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணி (இ. நே)
இடம்: புதிய உயர் கல்லூரி
(ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்)

இதில் அனைத்துப் பயிற்றப்படாத ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அமைப்புக் குழு
பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்

(70671)

---

கடந்த 28 வருடங்களாக தரமான மதுபானங்களை நிதானவிலையில் மதுப்பிரியர்களுக்கு வழங்கி வரும்

# வரமாஸ்

ஸ்தாபனத்தார்
பெருமையுடன் தருவதுதான்

# றொக்லண்ட்

**மதுபான உற்பத்திப் பொருள்கள்.**

கடந்த 7 சகாப்தங்களாக மதுபான உற்பத்தியில் முன்னணியில் திகழும்

**றொக்லண்ட் ஸ்தாபனத்தார்**

வழங்கும்

- றொக்லண்ட் சிலோன் அரக்
- றொக்லண்ட் ஓல்ட் அரக்
- றொக்லண்ட் ஓல்ட் அரக் (EXTRA STRONG)
- திறீஸ்ரார் அதிசக்தி சாராயம்
- ஹனப்பியர் பிரண்டி
- றொக்லண்ட் லெமன் ஜின்
- றொக்லண்ட் ட்றை ஜின்

இன்னும் பல

கொழும்பு விலையில் இருந்து ருபா 30 மட்டுமே கூடுதலாக

தீபாவளிக்கு உங்களை கிக்கென வைக்கப்போகின்றது **'றொக்லண்ட்'**

றொக்லண்ட் மதுபானவகைகளை யாழ். நகரில் தருவித்து விநியோகிப்போர்:

# வ ர ம ர ஸ்

121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி – 2989

மதியுள்ளவர்கள் மதிநுட்பத்துடன் தெரிவு செய்வது "றொக்லண்ட்"

எண்ணம் வடிவம், அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

(சி/9536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி இருந்தும் செம்மணி, அரியாலைப் பகுதிகளில்

# 261 ஹெக்டேயர் வயல் நிலத்தில்

# 3 ஆண்டுகள் நெற் செய்கை இல்லை

யாழ்ப்பாணம், நவ. 4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில உள்ள செம்மணி, மணியந்தோட்டம், அரியாலை, பூம்புகார்ப் பகுதிகளில் பாதுகாப்புக் காரணங்களினால் கடந்த மூன்றுவருட காலமாக 261 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்படா திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சம்பந்தப்பட்ட பகுதிப் படை அதிகாரிகளின் அனுமதியுடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட சிலபகுதிகளைச் சேர்ந்த வயல் உரிமையாளர்களுக்கு படையினர் அனுமதி அளித்துள்ள போதிலும் அச்சம் காரணமாக நெற் செய்கையை மேற்கொள்ளப் பலரும் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செம்மணி பிரதேசத்திலுள்ள நெல் வயல்களில் நெல் விதைப்பதற்கான அனுமதியை வழங்கு வதற்கு படையினர் தயாராக இருந்த போதிலும் இப் பகுதியில் நெற் செய்கையை மேற்கொள்ள மக்கள் அஞ்சுகின்றனர்.

இப் பகுதியில் வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தினாலும் பாதுகாப்பு அரண்கள் இருப்பதாலும் நெற் செய்கையை மீண்டும் மேற்கொள்ள விவசாயிகள் அஞ்சுவதாகத் தெரிகிறது.

செம்மணிப் பிரதேசத்தில் மனித புதை குழிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அண்மையில் இப் புதை குழிகள் தோண்டி முடிக்கப்பட்ட பின்னர் இப் பிரதேசத்தில் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனறு 51 ஆவது படைப் பிரிவு தளபதியிடம்கோரிக்கை விடப்பட்டது

இக் கோரிக்கைக்குப் பதிலளித்த இராணுவத் தளபதி இப் பகுதியிலுள்ள ராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பயிர்ச் செய்கையை மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தி இருந்தார். (ஐ-5)


## 85% எமக்கு வாடிக்கையாளரின் வாக்கு!

கடந்த 10 வருடகாலமாக சுவையான நாவிற்கு சுவை ஊட்டிய

**ஜோ. எகட்டன் ஜெசித்தாரா**

வழங்கும் அதிவிசேட சலுகை உணவுப் பெட்டிகளில்
கோழிப் புரியாணி, கோழி நூடில்ஸ்
கோழி (f)பிறைட்றைஸ், கோழிலாம்பறிஸ்
ரூபா 75 மட்டுமே

முன் பதிவு செய்பவர்களுக்கு முதல் இடம்
தாமதம் மேலும் தாமதம் ஆகும்.

ஜோ. எகட்டனின் "ஜெசித்தாரா"
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
சுண்டுக்குளி.

2000 யுகத்தில் புது உருவம்

(சி/9689)



## வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

**தரம் 5 புலமைப்பரிசில் தேர்வு - 1999**

யா/மிருசுவில் அ. த. க பாடசாலை

**வெ. இமயவல்லி - 141**

பாடசாலை வரலாற்றில் 40 வருடங்களின் பின் சித்தியடைந்த பெருமையைப் பெறும் இவரை மனமார வாழ்த்துகின்றோம் இந்த வகுப்பில் கற்பித்த ஆசிரியர் திரு இ சுதன் அவர்களையும், கீழ் வகுப்புகளில் கற்பித்த அனைத்து ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/மிருசுவில அ. த. க பாடசாலை.

(70657)



## மலிவு விற்பனை

வடிக்கையாளர்களுக்கு

**முக்கிய அறிவித்தல்**

1-11-99 தொடக்கம் 6-11-99 வரை.

சகல புடைவை வகைகளுக்கும் 7½ வீத விசேட விலைக் கழிவு வழங்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9607)


## விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 4

வடபிராந்திய போக்குவரத்துச்சபையினால் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட 210 ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

சாரதி, நடத்துநர் மற்றும் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றும் ஒப்பந்த ஊழியர்களின் விவரங்கள் இதற்கென சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-5)


**UNIVERSITY of JAFFNA**
**Faculty of Arts**

**Placement test in English**

Placement test in English for the New Entrants will be held on 5th November, 1999 at 10.00 a.m. All New Entrants are requested to sit the test.

– Registrar.

(C/9669)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
1999 இல் சித்தியடைந்த
யா/துன்னாலை

**காசிநாதர் வித்தியாலயம்**

செல்வி சி. ஜனனி - 141
செல்வி பா. கிருஷானி - 140
செல்வி த. லிசாஜினி - 134
செல்வி அ. அகல்யா - 128
செல்வன் வி. நிதீஸ்பன் - 126

மாணவர்களை தயார் நிலைப்படுத்திய அதிபர், ஆசிரியர்களை மனமுவந்து பாராட்டுகின்றோம்.

பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/9672)



## சங்கமம் ரெக்ஸ்

மழைத்துளி மழைத்துளி
மண்ணில் சங்கமம்
பனித்துளி பனித்துளி
மண்ணில் சங்கமம்
புதுவித புடைவைத் தினுசுகள்
சங்கமம்! சங்கமம்!!

**சங்கமம் ரெக்ஸில் சங்கமம்**

"இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஆடைகளின் பிரத்தியேக காட்சியறை"

**சங்கமம் ரெக்ஸ்**

(ஜனரஞ்சகமான ஜவுளி மாளிகை).

54A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (சி/9592)



## 3 ஆம் வருட நினைவஞ்சலி

**திருமதி இரத்தினம்மா சிவசிதம்பரம்**

மலர்வு 04 – 06 – 1939
உதிர்வு 07 – 11 – 1996

திதி 04 – 11 – 1999

குடும்பத்தின் தலைவியாய்
இல்லத்தின் ஒளிவிளக்காய்
தந்தையின்றி எம்மை வளர்த்த அன்னையாய்
சுடர்விட்டுப் பிரகாசித்த அன்னையே!
எம்மைவிட்டு எங்கு அம்மா சென்றீர்கள்?
கண்ணை இமைகாப்பது போல்
எம்மைக்காத்த அன்னையே!
அநாதைகளாக எம்மைவிட்டுப் பிரிந்ததெப்படி?
ஆதரிப்பாரின்றி அலைகின்றோமே!
எம்மைக்காக்க ஓடோடி வருவாயம்மா.

இவ்வண்ணம் இரத்தினம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மகன்மார், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

எம். திருச்செல்வம் ஒழுங்கை,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(சி/9688)



# ★ மாபெரும் மலிவு விற்பனை ★

வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

சகல விதமான ஜவுளித் தினுசுகளையும் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள வாருங்கள்! வாருங்கள்!!

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P. 2469

(சி/9590)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையியல் டிப்ளோமா பயிற்சி

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்
மகளிர் அபிவிருத்தி நிலையம்
07, ரத்னம் லேன்,
வண்ணார்பண்ணை.

(70662)

## தட்டுப்பாடு

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் நீரிழிவு நோயாளர்களுக்கான இன்சுலின் ஊசிமருந்துக்கு நட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இன்சுலின் பெறவேண்டிய நீரிழிவு நோயாளர்களை தனியார் கடைகளில் இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## BEACON

(வெலிங்டன் சந்தி அருகில்)

**A/L 2000**

(மீட்டல் வகுப்பு நடைபெறுகிறது)

**(கலைப் பிரிவு)**

தமிழ்:
BEACON ஆசிரியர்

இந்து நாகரிகம்:
ஜோதீஸ்வரன்

அளவையியல்:
S. S. மனோகரன்

புவியியல்:
ஞானேஸ்வரன்

கிறிஸ்தவம்:
சுனித்தா

நாடகமும் அரங்கியலும்
நிஷாந்தன்

(70631)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் / வடமராட்சி
**இந்து மகளிர் கல்லூரி**
பருத்தித்துறை

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1999

| | | |
|---|---|---|
| 1 | செல்வன் க. வாகீசன் | 161 |
| 2 | செல்வி தி. கோமதி | 155 |
| 3 | செல்வி செ. வாணிசிறீ | 153 |
| 4 | செல்வி கி. அபிலாஷா | 139 |
| 5 | செல்வன் பா. துஷியந் | 138 |
| 6 | செல்வி கு. வளர்நிதி | 136 |
| 7 | செல்வி யோ. சுரேந்தினி | 135 |
| 8 | செல்வன் சு. அரவிந்தன் | 133 |
| 9 | செல்வன் நா. துவாரகன் | 129 |
| 10 | செல்வி சி. வைஷ்ணவி | 128 |
| 11 | செல்வி ச. தமயந்தி | 128 |
| 12 | செல்வன் சி. உமாரமணன் | 125 |
| 13 | செல்வி க. சிந்துஜா | 125 |
| 14 | செல்வி ச, இராஷ்மி | 124 |
| 15 | செல்வி மா. அனோசியா | 124 |
| 16 | செல்வி தே. தேவகி | 122 |
| 17 | செல்வி வை. சிவதர்சினி | 119 |

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த பதினேழு மாணவ மாணவிகளையும் இவர்களை அயராது ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[சி/9673]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**வேலாயுதபிள்ளை அருணந்தி**
[பிரதேச செயலர், சாவகச்சேரி]

உயிருக்கு உயிரான குடும்பத் தலைவனாய்
ஆருயிர்த் தந்தையாய் அருமை உடன்பிறப்பாய்
உறவுக்கோர் உத்தமனாய் ஊருக்கோர் ஒளிவிளக்காய்
வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வமே!
மெய்ஞ்ஞான அம்பாள் பாதமதைப்
பற்றி விட்டீர் வணங்குகிறோம்
சாந்தி! சாந்தி! சாந்தி!

அமரரின் உயிரை மீட்டெடுக்க அரும்பாடு பட்ட வைத்திய கலாநிதிகள் ஏனைய ஊழியர்களின் சேவையை இறைவன் பாதங்களிற் சமர்ப்பிக்கின்றோம்.


எமது துன்பத்தில் பல வகையிலும் பங்குகொண்ட சகல அன்புள்ளங்களுக்கும் நன்றிகூறி அன்னாரின் இல்லத்தில் இன்று (4-11-99) வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

பெரியரசடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(70617)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்லப்பா மாணிக்கவாசகர்**
(இளைப்பாறிய ஆசிரியர் - யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

தோற்றம்
18-10-1911

மறைவு
05-10-1999

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல நாவலடி பொற்பத்தங்கேணி வீரகத்திப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு உதவிகள் புரிந்த உற்றார். உறவினர் நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மாசேரி,
வரணி.

(70627)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி 2000 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 10-11-99 நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 11-11-1999 நண்பகல் 12.00 மணிவரை
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 12-11-1999 பிற்பகல் 2.00 மணி.
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்:** | | | |
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 72000 00 |
| 02. ,, ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 12000.00 |
| 03. வளலாய், தம்பாலை பொதுச் சந்தை | 50.00 | 100.00 | 400.00 |
| 04. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 5000.00 | 662000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்:** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000 00 | 44500.00 |
| 02. வாதரவத்தை ,, ,, | 100.00 | 250 00 | 600.00 |
| 03. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 8000.00 |
| 04. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50.00 | 100 00 | 1200 00 |
| 05. புத்தூர் பொதுச்சந்தை | 100 00 | 250 00 | 4500.00 |
| 06. ஆவரங்கால் மீன் சந்தை | 25 00 | 50 00 | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்:** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன்சந்தை | 100 00 | 150 00 | 3500.00 |
| 02. ,, ஆட்டிறைச்சிக்கடை | 50 00 | 150.00 | 1200.00 |
| 03. ,, மாட்டிறைச்சிக்கடை | 250 00 | 1000.00 | 11500.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்:** | | | |
| 01. கோப்பாய் வடக்கு சந்தை | 50 00 | 150 00 | 2500.00 |
| 02. ,, ,, மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 1500.00 | 30500 00 |
| 03. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2500.00 | 66500.00 |
| 04. இருபாலை மீன்சந்தை | 50.00 | 150.00 | 1500.00 |
| 05. இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 2250.00 |
| 06. கோப்பாய் வடக்கு ,, | 100.00 | 150.00 | 2250.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்:** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 300.00 | 2500 00 | 80000.00 |
| 02. ,, ஆட்டிறைச்சிக்கடை | 200.00 | 1000 00 | 17000.00 |
| 03. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 47000.00 |
| 04. ,, ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4000.00 |
| 05. உரும்பிராய் மத்திய சந்தை | 250.00 | 1500.00 | 45000.00 |

பூ. குணசிங்கம்,
தவிசாளர்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
01-11-1999

[சி/9667]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒய்வூதியர் நலன்

ஓய்வு பெற்ற வங்கியாளர்கள் கடந்த வாரம் இப்போதைய வங்கியாளர்களால் கௌரவிக்கப்பட்டனர் இந்தச் சிறப்புமிக்க நிகழ்வு நடைபெற்றது இது இரண்டாவது தடவையாகும். சென்ற வருடமும் இது போன்ற கௌரவிப்பு விழாவை யாழ்ப்பாண வங்கியாளர் சங்கத்தினர் நடத்தினர்.

எந்தத்துறையில் பணிபுரிந்தவர்களாயினும், ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தப்பட்ட தொழிலில் அனுபவமும் ஆற்றலும் மிகுந்தவர்களாக இருப்பர் அவர்கள் வயதில் மூத்தவர்களாகி விட்டபோதும் தாம் சேவையாற்றிய துறைக்கும் நிறுவனத்துக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றியவர்களே.

அதனை மனதிற் கொண்டு, ஓய்வு பெற்ற வங்கியாளர்களை இப்போது அந்தத் துறையில் பணி செய்வோர் கௌரவித்து வருவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். யாழ்ப்பாண வங்கியாளர் சங்கத்தின் இந்தச் செயற்பாடு ஏனைய துறைகளில் இப்போது பணி செய்வோருக்கு ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும்.

எந்தத்துறையில் (இப்போது) பணி செய்பவர்களாக இருப்பினும், தமது துறையில் அல்லது நிறுவனத்தில் முன்னர் பணி செய்தவர்கள், தங்களைப் போலவே குறித்த துறையின் வளர்ச்சிக்கும் மக்களின் நலன்களுக்கும் உழைத்தவர்கள் என்பதனை உணர வேண்டும்.

தமது சேவைக்குரிய மதிப்பையும் நன்றியையும் ஓய்வூதியர்கள் உணரும்போது அவர்களுக்கு ஆத்மார்த்தமான மகிழ்ச்சியும் திருப்தியும் உண்டாகும். அதுவே இன்றுள்ளோர் செய்யக் கூடிய நன்றியாகும். ஓய்வூதியராக மாறிய பின்னர் தாமும் இவற்றை எதிர்பார்ப்பர் என்பதனை நிகழ்காலப் பணியாளர்கள் கருத்தில் கொள்வது நல்லது.

ஓய்வூதியர்கள் சமூகத்துக்குப் பயனற்றவர்கள் என்றோ வீட்டுக்குப் பாரமானவர்கள் என்றோ நினைத்தல் தகாது. அவர்களின் அனுபவத்தை எவ்வாறு பெறலாம் என்று திட்டமிட்டுப் பயன்பெற முனைய வேண்டும். ஓய்வூதியர் என்றதும் சாய்மனைக் கதிரையை நினைவுக்குக் கொண்டு வராது அவர்களது சேவைக்குப் பெறுமானம் போட்டுப்பார்க்க வேண்டும்.

மேலும் அரசாங்கத்துறைகளைப் பொறுத்த வரையில் ஓய்வூதியர்களின் நலன்களை தற்போதைய பணிப்பாளர்கள் மனவிருப்பத்துடனும் அக்கறையுடனும் கவனிப்பதில்லை என்ற குறைபாடு நீண்ட காலமாக நிலவி வருகிறது. மிகக் குறிப்பாக ஓய்வு பெற்ற ஒருவர் தமக்குரிய ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக பல மாதங்கள், ஏன். சில வருடங்கள் கூடக் காத்திருக்க வேண்டியுள்ளது.

ஓய்வூதியர் தமது சேவையிலிருந்து நீங்கிய இரண்டொரு மாதங்களில் தமக்குரிய ஓய்வூதியப் பணத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளை வகுக்க முடியாதா? இறுக்கமான, காலத்துக்கு ஒவ்வாத சிவப்பு நாடா முறைகளை நீக்கி துரிதமாகப் பணியாற்றி ஓய்வூதியருக்கு உதவுவதில் நிகழ்கால அரசாங்க ஊழியர்களுக்கும் பெரும் பங்குண்டு, தத்தமது தொழிற்சங்கங்கள் மூலம் இது விடயத்தை முன்னெடுக்கலாம்.

ஓய்வூதியர்கள் நலன்கள் உரிய முறையில் பேணப்படுவதும் ஒரு வகையில் அவர்களைக் கௌரவிப்பதும் மதிப்பளிப்பதும் ஆகும். மூத்த வயதில் ஒவ்வொருவரும் தமக்கும் சமூகத்தில் ஓர் இடமுண்டு; தாம் ஒதுக்கப்படவில்லை என்ற உணர்வுடன் வாழ இயன்றவரை உதவுவது எல்லோரது கடமையுமாகும்.

### யாழ். கல்வி வலயத்தில்

# பதினான்கு பாடசாலைகளில் தீபாவளி விழாக் கொண்டாட ஏற்பாடு

குருநகர், நவ. 4

யாழ் கல்வி வலயத்தில் உள்ள 14 பாடசாலைகளில் எதிர்வரும் திங்கட்கிழமை தீபாவளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி. கொக்குவில் இந்துக் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், அச்சுவேலி மகா வித்தியாலயம், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய பதினான்கு பாடசாலைகளே தீபாவளி விழாவை நடத்த இம்முறை தெரிவு செய்யப்பட்ட மூலாதாரப் பாடசாலைகளாகும்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை, நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாயலம். நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க. பாடசாலை. நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம். செங்குந்த இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்கள், கனகரத்தினம் ம மகா வித்திய லயத்திலும் —

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை புனித ஜோசப் வித்தியாலயம், பாஷையூர் புனித அந்தோனியார் வித்தியாலயம், புனித றொக்ஸ் வித்தியாலயம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும் —

திருக்குடும்பகன்னியர்மடம் மகா வித்தியாலயம் கன்னியர் மடம மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் வேம்படி மகா வித்தியாலயத்திலும் —

சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, சென்ஜேம்ஸ் மகளிர்பாடசாலை, புனித மரியாள் வித்தியாலய மாணவர்கள் யாழ். மத்திய கல்லூரியிலும் —

வைத்தீஸ்வராக் கல்லூரி, நாவாந்துறை றோ. க. வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

கொட்டடி நமசிவாய வித்தியாலயம் சண்மார்க்க மகா வித்தியாலயம், வண். நாவலர் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் யாழ். இந்துக் கல்லூரியிலும்—

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், உயரப்புலம் மகா வித்தியாலயம், வெளிபுலம் மகாவித்தியாலயம், கொக்குவில் நாமகள் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும்—

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், முத்துத்தம்பி மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும்

அச்சுவேலி சென்திரேசா, இடைக்காடு மகாவித்தியாலயம், பத்தைமேனி இரத்தினேஸ்வரிவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும்.

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம், சிறுப்பிட்டி இ த. க. பாடசாலை சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலும் —

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், அச்சுவேலிமகாஜன வித்தியாலயம் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும் —

நீர்வேலி றோ க.த க பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை அச்சுவேலி சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் அத்தியார் இந்துக்கல்லூரியிலும்

கோபபாய் நாவலர் வித்தியாலயம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் கோப்பாய் மகாவித்தியாலயம், கோப்பாய் கந்தவேள் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்—

ஊரெழு கணேசா வித்தியாலயம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் —

தீபாவளி விழாக்களில் கலந்து கொள்வர்.

(ஐ-51)

## கைதான இளைஞர் அ. புரத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 4

படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த வாரம் காங்கேசன்துறை பொலீஸாரால் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சோதிலிங்கம் சுரேஸ்குமார் [வயது 21[ என்ற இளைஞரே இவ்வாறு அனுப்பப்பட்டதாக காங்கேசன் துறைக்குச் சென்று திரும்பிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

[ஐ-9]

## சுன்னாகம் விவசாயிகளுக்கு சுழற்சி முறைக் கடன் உதவி

சுன்னாகம், நவ. 4

சுன்னாகம் தெற்கு விவசாய சம்மேளனம் அகதிகளுக்கான ஐ நா. தாதரக உதவித் திட்டத்தின் கீழ் 25 பேருக்கு தொழில் முயற்சிக்கான கடன்களை வழங்கியுள்ளது

விவசாயம், சிறுவியாபார முயற்சிகளில் முதலீடு செய்வதற்கு சுழற்சி முறையில் இக் கடன் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

10 ஆயிரம் ரூபா பெறுமதியான இக்கடனுக்காக ஐ நா தூதரகம் இரண்டரை லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது.

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் கிராம சேவகர் எஸ். வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வலி தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பயனாளிகளுக்குப் பணத்தை வழங்கினார். விவசாய சம்மேளனத் தலைவர் க. தியாகலிங்கம், சட்டத்தரணி லயன் எஸ் பீ. சிவஞானம் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(ஐ-27)

## போசாக்கு விழிப்புணர்ச்சி கட்டுரை, சுவரொட்டிப் போட்டி

வலிகாமம் தெற்கு, நவ. 4

வலிகாமம் கல்வி வலயம், போசாக்கு விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் போசாக்கு சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக சுவரொட்டி மற்றும்கட்டுரைப் போட்டிகளை நடத்த் உள்ளது.

கோட்ட மட்டத்தில் நடத்தப்பட உள்ள இந்தப்போட்டிகளில் சுவரொட்டிப் போட்டிகள் மூன்று பிரிவுகளிலும் கட்டுரைப் போட்டிகன் ஐந்து பிரிவுகளிலும் நடைபெறவுள்ளன.

வலய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சுவரொட்டி, கட்டுரைப்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

[ஐ-8-152]

## நாளை

ஐப்பசி 19

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி

காலை 6 53 வரை.

நட்சத்திரம்: அத்தம்

பின்னிரவு 3.55 வரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 6.04 — 7 34

ராகுகாலம்: 10.34 12.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தொண்டு என்பது இனிமை தரும் கனவல்ல; கசப்பான உண்மை.

— காண்டேகர்

## வாசகர் திருமுகம்

### கந்தசஷ்டி எப்போது; இதில் குழப்பம் ஏன்?

கந்தசஷ்டி விரதம் எப்போது ஆரம்பமாகி முடிவடைகிறது. என்பது குறித்து வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கம் ஆகியன முரணான தகவல்களை வழங்கி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி உள்ளது.

கந்தசஷ்டி விரதம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி ஞாயிறு முடிவடைகிறது என வாக்கிய பஞ்சாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் திருக்கணித பஞ்சாங்கமோ 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவடைகிறது எனத் தெரிவித்துள்ளது.


இது சைவசமயத்தவர்களைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. கந்தசஷ்டி விரத அனுட்டிப்பு ஏழு நாளா அல்லது ஆறு நாளா என்பது தெரியாமல மக்கள் குழம்பிப்போயுள்ளனர். இதனால் ஆலய நிர்வாகங்களும் எதனைக் கைக்கொள்வது என்று தெரியாமல் திண்டாடுகின்றன.

அதுமட்டுமல்ல நவராத்திரி விரதம், பெருங்கதை, கௌரி விரதம் சர்வாலயதீபம் போன்ற விரத அனுட்டானங்களிலும்கூட சில வேலளகளில் இரு பஞ்சாங்கங்களும் ஒன்றுக்கொன்று முரணான தகவலகளை வழங்கி வருகின்றன.

இதுவிடயத்தில் இருபஞ்சாங்கங்களின் ஆசிரியர்களும் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வருவார்களானால் விரதம் அனுட்டிப்பவர்களுக்கு இலகுவாக இருக்கும். செய்வார்களா?

சைவ அபிமானி

கரணவாய்.



## சாயி சிந்தனை

தங்கத்தை உலோகங்களான செம்பு, பித்தளை, வெள்ளி போன்றவற்றுடன் கலப்பதால் அதன் பிரகாசத்தையும் மதிப்பையும் அடையாளத்தையும் இழந்து விடுகிறது அதைப் போலவே இதயத்தையும் தங்கத்திற்கு ஒப்பிடலாம். அதுவும் தனது மதிப்பை, ஒளியை, அடையாளத்தை உலகியல் ஆசைகளுடன் கலந்திருப்பதால் இழந்துவிடுகிறது. இதுதான் உலகின் இன்றைய துயரம்.

மனிதன் அரக்கனைப்போல, பிசாசைப்போல மிருகத்தைப்போல நடந்துகொள்கிறான். ஏனெனில் அவன் தனது தெய்வீக இயல்பை மறந்துவிட்டான்.

தெய்வீக அன்புஹிரண்ய கர்ப்பத்திலிருந்துவெளிப்படுகிறது. தெய்வீக அன்பு கொடுப்பதிலும், மற்றவற்றை மன்னித்து மறப்பதிலுமே இருக்கிறது. ஆனால் சுயநலமான அன்பு, மற்றவரிடமிருந்து பெற்றுக்கொள்வதிலும் பின்னர் அதனை அடியோடு மறந்து விடுவதுமா வாழ்கிறது. மனிதனுக்கு தெய்வீக அன்பு மிகவும் அவசியம்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழையும் இசையையும் வளர்க்க தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்

## பிரதிக் கல்விப் பணிப்பாளருக்குப் பாராட்டு

தமிழ்மொழியையும், இசையையும் வளர்ப்பதற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் இசை வள்ளல் சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை. இவரின் கம்பீரமான தோற்றமும் கனிவான குரலும் இசையில் இவருக்குள்ள மிகுந்த ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றன. இவர் கல்வி உலகுக்கு பெருமை சேர்ந்த பெருமகனார். இவரின் சேவை மேன்மேலும் தொடர இறைவன் நீண்ட ஆயுளையும் சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளைக்கு நடத்தப்பட்ட மணி விழாவில் மேலதிக அரச அதிபர் உரை நிகழ்த்தினார்.

இளைப்பாறிய அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் மணிவிழா நடைபெற்றது.

சங்கீத பூசணம் சு. கணபதிப்பிள்ளையும் பாரியாரும் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இருந்து விழா மண்டபத்துக்கு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர் இசை ஆசிரியர்கள், கல்விமான்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர், குரு மகா சந்நிதானம் சிவஸ்ரீ க. சுந்தர ராஜக்குருக்கள், அருட்திரு. கலாநிதி பஸ்ரின் ஞானப்பிரகாசம், பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கத் தலைவர் பண்டிதர் சு. ஆறுமுகம் அவர்களினால் மணிவிழா நாயகன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களினால் ''சுரலயகான மணி'' என்னும் பட்டம்வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் சார்பில் கலா பூசணம் அ. மு. முருகவேள் அவர்களினால் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளையின் கல்விச் சேவையைப் பாராட்டி இவரிடம் கல்வி பயின்றமாணவர்களும் கல்விமான்களும் பொன்னாடை போர்த்தியும் பாராட்டுப்பத்திரம் வழங்கியும் தங்கப்பதக்கம் வழங்கியும் கௌரவித்தனர்.

கல்விப்பணிப்பாளர்கள் வீ. இராசையா, ப. விக்கினேஸ்வரன், அ. தற்பரானந்தன், ஆ. வ. கணேசலிங்கம், எஸ். செல்லையா, யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் உட்பட இன்னும் பலர் மணிவிழா நாயகனின் சேவையைப்பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

(இ-175)

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 2 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(118468ஏ), (118468பி), (118468சி), (118468டி), (118468ஈ), (121405ஏ), (121593ஏ), (121818ஏ), (125351ஏ), (125352ஏ), (125415ஏ).

**சாவகச்சேரி**

(123056ஏ), (120886ஏ), (120886பி), (120886சி), (120886டி), (123260ஏ), (123260பி), (123260சி) (123313ஏ), (126121ஏ), (126121பி), (126121சி), [123670ஏ], [123670பி].

**நெடுந்தீவு**

[12202ஏ], [12202பி], [12202சி].

**யாழ்ப்பாணம்**

[122659ஏ], [122675ஏ], [122676ஏ], [122715ஏ], [122715பி], [122715சி], [122732ஏ], [122767ஏ], [122767பி].

[122868ஏ], [122868பி], [122888ஏ], [124408ஏ], [124477ஏ], [124576ஏ].

**கரவெட்டி**

[117598ஏ]

**ஊர்காவற்றுறை**

[12145ஏ], [12145பி], [12183ஏ], [12183பி], [12184ஏ], [12198ஏ], [12216ஏ], [12224ஏ], [12224பி], [12236ஏ], [12236பி], [12236சி], [12236டி], [12352ஏ], [12354ஏ], [12354பி], [12354சி], [12354டி], [12371ஏ]. (12376ஏ). [12376பி], [12376சி], [12376டி], [12376ஈ], [12383ஏ], [12383பி]. [12397ஏ], [12397பி], [12397சி], [12398ஏ], [12398பி], [12398சி]

**கோப்பாய்**

(110840ஏ), (1108510ஏ), (110851பி), (116574ஏ), [119543ஏ], [119543பி], [119625ஏ], [119625பி], [121116ஏ], [121116பி].

[121131ஏ], [121147ஏ], [121165ஏ), [121165பி], (121165சி], [121167ஏ], (121187ஏ], [121189ஏ], [121197ஏ], [121209ஏ] [121209பி], [121211ஏ], [121211பி], [121211சி], [121221ஏ], [121221பி], [121222ஏ], [121223ஏ], [123110ஏ], [123117ஏ], [123132ஏ].

[123973ஏ] [123973ஏ], [123983ஏ], [123997ஏ], [123997பி], [124000ஏ], [126574பி].

**நல்லூர்**

(122314ஏ), (122314பி), (122314சி), (123060ஏ), (123060பி), (123060சி), (123066ஏ), (123067ஏ), (123067பி), (123067சி), (124281ஏ).

**சண்டிலிப்பாய்**

123429ஏ), (123617ஏ), (123617பி), (125430ஏ). [125409ஏ].

**உடுவில்**

(117529 ஏ), (123886ஏ), (117097 ஏ), (119394 ஏ), (119394 பி), (121727 ஏ), (1 479 ஏ). (123637 ஏ)

**வேலணை**

(12358 ஏ), (12358 பி), ((12368 ஏ), (12374 ஏ), (12375 ஏ), (12375 பி), ]12380 ஏ.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் [இம் மாதம் 3 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

(120244ஏ), (120912ஏ), (120954ஏ), (123271ஏ), (123280ஏ), (123280பி), (123280சி), (120280டி), (123280ஈ), (123280எவ்), (123280ஜி), [123305ஏ], [123305பி], [121895ஏ], [121895பி], [121895சி], [121895டி], [121895ஈ], [121895எவ்].

**சரவெட்டி**

[111329ஏ], [115294ஏ], [118848ஏ], [118848பி], [119853ஏ], [119853பி], [119853சி], [119853டி]. [119853ஈ], [119869ஏ], [119961ஏ]. [120023ஏ], [120059ஏ], [120059பி], [120059சி], [120059டி], [120059ஈ], [121976ஏ], [121976பி], [121999ஏ]. [122131ஏ], [122131பி], [122133ஏ], [122253ஏ], [122253பி], [122300ஏ], [123365ஏ].

**மருதங்கேணி**

(121890ஏ), (121890பி), (115239ஏ), (118848சி), (118848டி), (119171ஏ),

**பளை**

123695ஏ),

**பருத்தித்துறை**

(119787ஏ), (119826ஏ), (119827ஏ), (119827பி), (119936ஏ), (119966ஏ), (119966பி), (119966சி), (119969ஏ), [119979ஏ), (119979பி), (120023ஏ), (120265ஏ), (121915ஏ), (122061ஏ), (122061பி), (125539ஏ),

## பரிசளிப்பு விழா

நாவற்குழி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி வித்தியாசாலையில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் இ. முருகையன் கலந்துகொள்ளுவார்.

(இ-103)

## தங்கநகைகள் அபகரிப்பு

திருநெல்வேலி, நவ. 4

நள்ளிரவு வேளை வீட்டின் ஜன்னல் கம்பிகளை உலக்கையினால் பிரித்து உட்புகுந்த திருடர்கள் மின்சாரவிளக்கை அணைத்துவிட்டு அங்கிருந்த பெண் அணிந்திருந்த ஒன்பது தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடியையும், மூன்று பவுண் தங்கச்சங்கிலியையும் அபகரித்துச் சென்றனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 12மணியளவில்யாழ் பிறவுண் வீதி, 2 ஆம் குறுக்கு ஒழுங்கையில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-135)

## அன்பளிப்பு

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 75 ஆவது பிறந்த நாள் விழாவின் போது வலிகாமம் வலயத்தில் உள்ள சில வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்க பவளவிழாச் சபையினர் தீர்மானித்துள்ளனர்.

தரம் பத்தில் கல்வி பயிலும் கல்வியில் திறமையுள்ள அதே நேரம் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்களுக்கே அன்பளிப்புப் பொருட்கள் [illegible]

(ஐ-152)


ஹற்றன் நஷனல் வங்கியினால்

நடத்தப்படும்

மாபெரும் வருடாந்த கூடைப் பந்தாட்டப் போட்டி 1999

இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்

நாள்: 05-11-99 தொடக்கம் 27-11-99வரை

நேரம்: பிற்பகல் 3. 30 மணி

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

HATTON NATIONAL BANK HNB LIMITED

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[சி/9693]


# மரண அறிவித்தல்கள்

## V. R. தம்பிப்பிள்ளை நவரட்ணம்

(V. R. T. ஸ்தாபன பங்காளர் கிளிநொச்சி)

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் இல. 175, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நவரத்தினம் 1-11-99 இல் கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற V. R. தம்பிப்பிள்ளை புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ர புத்திரனும் முத்துலச்சுமியின் அன்புக் கணவரும் சனஞ்சயன், கிரிசைசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தருமரத்தினம், விக்கினேஸ்வரி, மோகனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலாநிதி சிவகுமாரன், ஈழவர்மன், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2-11-99 கொழும்பிலுள்ள கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சங்கரப்பிள்ளை
[மாமா]

திக்கரை,
காரைநகர்.

[70652]

## தி. சுந்தரம்

(தவில் வித்துவான்)

(வலயப்பட்டி சுப்பிரமணியம்)

கல்வியன்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட தி. சுந்தரம் [ தவில் வித்துவான் ] 3-11-99 இல் காலமானார்.

இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், கௌசல்யா, சசிகுமார், சுரேஸ்குமார், கௌரிமனோகரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-11-99) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் பகல் 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. தையல்நாயகி [மனைவி]

கலட்டி பிள்ளையார் கோயிலடி,
கல்வியன்காடு.

[70668]

## திருமதி மயில்வாகனம் ரோகினியம்மா

(சின்னம்மா)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னம்மா என அன்பாக அழைக்கப்படும் திருமதி மயில்வாகனம் ரோகினியம்மா காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குட்டித்தம்பி என அன்பாக அழைக்கப்படும் முத்தையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராசா, கமலாதேவி, கணேசராசா வாமதேவா, இரத்தினேஸ்வரன், மேகலாதேவி, ஸ்ரீதேவா, கலாதேவி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தயாரும், பத்மா, சபாரத்தினம், பேரின்ப கலைவாணி, ஜீவா, குகரத்தினம், வசந்தகுமாரி, திருபுரச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும். பொ. அருளம்பலத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-11-99) காலை 10மணிக்கு இல. 433, கண்டி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படு .

தகவல்:
கணேசராசா (மகன்)

343, கண்டி வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்,

[70675]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

தாயின் மடியில்:
16-09-1963

தாயக மண்ணில்:
02-11-1999



கட்சியின் மூத்த உறுப்பினரும் தினமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியரும்
கட்சியின் அரசியல் செயலரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

## தோழர் ரமேஷ் - நடராஜா அற்புதராஜா

(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

உலகளந்த தமிழ்த்தாயின் உற்றதுயர் களைந்தெறிய
ஒன்றுபட்டு நின்று ஒப்பரிய பணியாற்றி
ஈழமக்கள் உயிரனைய
உரிமைதனை வென்றெடுக்க
தோளோடு தோள்நின்று
தோழமையாய் இணைந்து - எம்
கையோடு கைகோர்த்து கடைசிவரை உழைத்தவனே!
கொடியவரின் கொலைவெறிக்கு
அடிபணிந்து போனாயோ?
உனை இழந்து தவிக்கின்றோம்
உத்தமனே உன்நாமம் என்றென்றும் நிலைக்கட்டும்!
கண்ணீரால் உனை நனைத்து
கவலைக் கடலாடுகின்றோம்!
இரண்டு தசாப்தங்களாக தமிழ்மக்களின்
விடுதலைக்காக உழைத்தவரும்
தனது எழுத்தின் வீச்சால்
தமிழ்ப் பத்திரிகையுலகினை அதிர வைத்தவரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சோர்விலா
செயற்பாட்டாளருமாகிய
பாசமிகு தோழனே! எம் இதய அஞ்சலிகள்!! அஞ்சலிகள்!!

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**
**யாழ். மாவட்டம்.**

(சி/9699)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் யாழ்-திருமலை அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 4

மிட்சுஇ—ஜெசிபாவெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் யாழ்., திருமலை அணிகள் வெற்றிபெற்றன.

யாழ் — வவுனியா அணிகளுக்கிடையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து விளையாடிய யாழ். மாவட்ட அணி 35 ஆவது ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. யாழ். அணியில் சபாநாத் சதம் அடித்தார்.

மட்டக்களப்பு—திருகோணமலை மாவட்ட அணிகளுக்கிடையில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 141 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து ஆடிய திருகோணமலை மாவட்ட அணி வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை அடித்து 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாளையாழ்ப்பாணம்—மட்டக்களப்பு அணிகளுக்கு இடையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் ஆட்டத்தினை யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் ஆரம்பித்து வைப்பார். (இ-4-8)

## விளையாட்டுப் போட்டி

நல்லூர், நவ. 4

ாவற்குழி மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளர் கவிஞர் இ. முருகையன் கலந்துகொள்வார். (சு-103)

## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 4

எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்கும் ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறவிருந்த பரீட்சை நிலையங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலய கல்விப்பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பத்திரிசியார் கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் யாழ் மத்திய கல்லூரிக்கும் சன்மார்க்க வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் கனகரத்தினம் ம. ம. விக்கும் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது. (இ-9)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 4

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று கனகரத்தினம் ம.ம.வி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 3-00 மணிக்கு— விக்ரறி வி.க. எதிர் விநாயகர் வி. க.

★ மாலை 4-30 மணிக்கு— கலைமகள் வி. க. 'ஏ' அணி எதிர் சயன்ஸ் அக்கடமி வி.க. 'பி' அணி. [இ-4]

# விமானப் பயணிகளுக்கு சிவில்நிர்வாகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 4

குடாநாட்டில் இருந்து விமானம் மூலம் வெளியிடங்களுக்கு செல்வோருக்கு சில அறிவுறுத்தல்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் விடுத்துள்ளது.

விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பயணிகள் செயல்பட்டால் மட்டுமே தமது பயணத்தை உறுதி செய்யமுடியும் என்றும் அது தெரிவித்துள்ளது.

அந்த அறிவுறுத்தல்கள் வருமாறு:

★ விமானப் பயணத்துக்கு விண்ணப்பிப்பவர் தமக்கு அனுமதி கிடைத்துள்ளதா என்பதை 'உதயன்' பத்திரிகையில் வெளியாகும் பட்டியல்களில் உறுதி செய்து யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு சமுகம் தரவேண்டும்.

★ பயண அனுமதி கிடைத்தவர்கள் முதலில் தமது பதிவுகளை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் செய்யவேண்டும். பதிவுகள் தொடர்பான அனுமதி கிடைத்ததும் பயணிகள் யாழ். சிவில் நிர்வாக அதிகாரியைச்சந்தித்து, தமது பயணத்துக்கான திகதியை உறுதிசெய்ய வேண்டும். டிக்கெட் பெறும் திகதி, நேரம் ஆகியன குறித்த விவரங்களைப் பெற்று குறிப்பிட்ட திகதியில் வந்து டிக்கெட்டைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

★ டிக்கெட் கொள்வனவு செய்ய வரும்போதும் பயணத்துக்காக வரும்போதும் பயண அனுமதிப் பத்திரத்தின் இரு பிரதிகளையும் எடுத்துவரவேண்டும்.

★ பயண அனுமதிப்பத்திரத்தைத் தொலைத்தால், உடன் சிவில் நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு புதிய பயண அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டும்.

★ நீதிமன்றத்தினால் வெளியே செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் சிவில் நிர்வாக அலுவலகத்தில் உள்ளன. அத்தகையோர் நீதிவானின் அனுமதிக் கடிதத்துடன் வந்தால் பயணம் செய்யமுடியும்.

★ கொழும்பில் இருந்து திரும்பிப்போகும் டிக்கெட்டில் வருபவர்கள் பயணத் திகதிக்கு முன்னர் 48 மணி நேரத்துக்குள் பயணத்தை உறுதி செய்ய வேண்டும்.

★ பயண அனுமதிப் பத்திரத்தின் கால எல்லை 45 நாளாகத் தற்சமயம் உள்ளது. அந்தக் கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 60 நாளாக்கப்படவிருக்கின்றது. (இ-3)

## இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். கன்னாதிட்டி மற்றும் ஏழாலை தெற்கைச் சேர்ந்த இரு இளைஞர்கள் அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேசாவில் றோட், பத்திர காளி அம்மன் கோயிலடி, வண்ணர்பண்ணையைச் சேர்ந்த புண்ணியவேல் கோகிலன் (வயது 20) என்பவர் கடந்த முதலாம்திகதி கன்னாதிட்டியில் உள்ள நகைக் கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த படையினரால் கைது செய்யப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்த இளைஞரைக் கைது செய்யும்போது அவரிடம் இருந்த இரண்டு கைக்குண்டுகள் கடையில் இருந்து கைப்பற்றப்பட்டதாக படையினரால் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலங்காடு, ஏழாலை தெற்கைச் சேர்ந்த மாதன் செல்வம் (வயது 37) என்ற இளைஞன் நேற்று முன்தினம் ஏழாலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர். (ஐ-9)

## 'சதோச' ஊழியர் கைது

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ''சதோச'' விற்பனை நிலையத்தில் பணியாற்றி வரும் சிவலிங்கம் கமலேஸ்வரன் (வயது 25) என்பவர் நேற்று மாலை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரின் பெற்றோர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுலலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர் 512 ஆவது படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-4-6)

## பாண்டியன் குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ கு. புண்ணியலிங்கம் (வயது41)
★ வை. கண்ணன் (வயது-19)
★ இ. நவரட்ணதாஸ் (வயது-23)
★ கி. கயல்வேந்தன் (வயது-17)

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

★ ஆர். காசிலிங்கம் (வயது-60)
★ சி. கிருபநாதன் (வயது-55)
★ இ. சந்திரகுமார் (வயது-30)
★ ஆர். தியாகராஜா (வயது-44)
★ எஸ் மகேந்திரராஜா (வயது-35)
★ ஆர். அமிர்தராஜா (வயது-41)
★ எஸ். குணசிங்கம் (வயது-36)

கிபிர்த் தாக்குதலில் உயிரிழந்த மல்லாவி மத்திய கல்லூரி மாணவன் கி. கயல்வேந்தனின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முற்பகல் 11.30 மணியளவிலும் பிற்பகல் 1 மணியளவிலும் எம். ஐ-24 ரக ஹெலிக்கொப்ரர்கள் பாண்டியன்குளம் பகுதி மீது தொடர்ச்சியாக மோட்டார்த் தாக்குதல்களை மேற்கொண்டன.

இடையிடையே அப் பகுதி மீது ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதில் [illegible] காயமடைந்தனர். (இ-7-6-3-164)

# ஸ்ரீபாஸ்கரனின் உடல் மல்லாகத்தில் தகனம்

அளவெட்டி, நவ. 4

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரனின் இறுதிக் கிரியைகள் கடந்த சனிக்கிழமை மாலை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்க மைதானத்தில் இடம் பெற்றன.

அன்று காலை 8 மணியளவில் மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் மல்லாகம் வட்ட பதில் நீதிபதி சபாநாதன் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிநாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, மத்திய குழு உறுப்பினரும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான, அரவிந்தன், யாழ். மாநகரசபை பிரதி மேயர் ரவிராஜ், வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் எஸ். திரிலோகநாதன், வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் ம. செல்வராசா உட்பட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்—

பின்னர் அவரது பூதவுடல் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவ மாணவிகளின் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு' மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம், வலி. வடக்குப் பிரதேச சபை ஆகிய வற்றிலே பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் மாலை அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. [ஐ-13-86]

## ஜனாதிபதி வேட்பாளர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் சார்பில் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் சிசில் முனசிங்கவை சுயேச்சை வேட்பாளராக போட்டியிட வைப்பதற்கு பௌத்த காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. (இ-6)

## நெடுங்கேணி...

[முதலாம் பக்கத் தொடர்]

தொடர் இராணுவ வேலிகள் மற்றும் காவலரண்கள் ஆகியவற்றைத் தாம் கைப்பற்றி அழித்துள்ளதாகவும்—

இதன் மூலம் 20க்கும் அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 30 கிலோ மீற்றர் நீளமான பிரதேசம் கைப்பற்றப்பட்டதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சமழங்குளம், மணவாளன் பட்டமுறிப்பு ஆகிய கிராமங்களும் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள மாறா இலுப்பைக்குளம், கொல்ல்ன் குளம், தண்டுவான், குளவி சுட்டான், ஒதியமலை உட்பட பல கிராமங்களும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாகவும் — புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் நேரடி வழிகாட்டலில் நடத்தப்படும் இந்தச் சண்டை தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெருமளவில் கனரக ஆயுதங்கள், பவள் கவச வாகனங்கள், டிறக்குகள், பவுஸர்கள் உட்பட பல வாகனங்கள் இராணுவ களஞ்சியங்கள் என்பன தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும்—

தமது தாக்குதலால் விமானப் படை விமானம் ஒன்றுக்கு சேதம் ஏற்பட்டதாகவும்—புலிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம்புலிகளின் லண்டன் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் 133 படையினரின் சடலங்களை ஒப்படைக்க தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் கூறப்பட்டிருந்தது. (இ-6-7-21-4-8)

## அ' புரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

வரை குறித்த வழக்கு விசாரணையை ஒத்தி வைப்பதாகத் தெரிவித்து நீதிவான் விக்னராஜா வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களான வேல்மாரி— அசோகானந்தன் [வயது 20 — துன்னாலை கிழக்கு], சுப்பன்—தருமலிங்கம் [வயது 38— நெல்லியடி], ஆழ்வான்— வன்னியசிங்கம் [வயது 44 — கரவெட்டி தெற்கு] ஆகிய மூன்றுசந்தேக நபர்களையும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே அனுமதித்த 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். அத்துடன் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறும் பணித்தார். (இ-173-3-109)

## ஒட்டுசுட்டான்...

[முதலாம் பக்கத் தொடர்]

தோர், காயமடைந்தோர், காணாமற்போனோர் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஐத் தாண்டியிருக்கலாம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் தமது தரப்பில் 40 பேர் உயிரிழந்தனர் என்று புலிகள் நேற்று இரவு அறிவித்தனர். (இ-6-7-4)

## சண்டை...

[முதலாம் பக்கத் தொடர்]

மேற்கொள்வதற்காக அவர் களமுனைக்கு விஜயம் செய்ததாகவும்—

தொடர்ந்து அங்கு தங்கிநின்று படையினரை வழி நடத்தி வருவதாகவும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம்—

அனுராதபுரம் இராணுவத் தளம் மற்றும் பூநாவ கடற்படைத் தளம் ஆகியவற்றுக்கு படையினரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்து அவர்களின் நிலை குறித்து விசாரித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. காயம் அடைந்த படையினரில் 122 பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் 280 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-6-21)

## தற்போது...

[முதலாம் பக்கத் தொடர்]

அந்த வரிசையில் ஒட்டுசுட்டான் முகாம் மீதான தாக்குதல்களுக்கு ''ஓயாத அலைகள் - 3'' என்று பெயரிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இடம் பெற்ற தாக்குதலிலும் கிளிநொச்சியில் இடம்பெற்ற தாக்குதலிலும் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்தது தெரிந்ததே. (இ-3-6-7)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்[ லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி. 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 4-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org